86

# …தனை விஷய பூங்கொத்து

…தமொருமுறை மலரும்!

ஒழுக்கமே · அறிவு★உழைப்பு · திறமை

நேச மாதா · ஆசை தாதா

Venkatachalam S. 1941-43

Editor … Lourduswami, B.A., L.T.
Publis…
R. … ing School, Trichinopoly.

86
JUL
3L
ஊ211, N1IPP
N144.34.12
189993

கோ… ஜூன் 1944 மலர் 12

R. C. போதனுமுறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 2

# போதனா விஷயப் பூங்கொத்து

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்புகள் ... ... | 181 |
| 2. | சென்னை கல்வி இலாகா ... ... ... | 183 |
| 3. | Results of the T. S. L. C. Examination, March, 1944 ... | 184 |
| 4. | லிகிதம்—ஒரு கலை ... ... ... | 187 |
| 5. | யோசனைக்கணக்கு ... ... ... | 188 |
| 6. | பாடக்குறிப்பு ... ... ... ... | 189 |
| 7. | சிறு கதை ... ... ... ... | 190 |
| 8. | சில மீன் வகைகள் ... ... ... | 192 |
| 9. | நெடுநாள் வாழ்வதெப்படி? ... ... | 193 |
| 10. | விடுகவிகள்—இது என்ன? ... ... | 194 |
| 11. | ஆரம்ப வகுப்புகளில் கதை சொல்வதெப்படி? ... | 195 |
| 12. | இருசொல் அலங்காரம் ... ... ... | 196 |
| 13. | உங்களுக்குத் தெரியுமா? ... ... ... | 197 |
| 14. | முதல் வகுப்புக்கேற்ற ஓர் கணிதப்பாட்டு ... | 198 |
| 15. | பெற்றோர் சங்கங்கள் ... ... ... | 199 |


---


## Rates of Advertisement

| PERIOD | HALF PAGE | | | FULL PAGE | | |
|---|---|---|---|---|---|---|
| | Rs. | As. | Ps. | Rs. | As. | Ps. |
| 1 Month ... ... | 4 | 0 | 0 | 7 | 8 | 0 |
| 3 Months ... ... | 11 | 0 | 0 | 20 | 0 | 0 |
| 6 Months ... ... | 20 | 0 | 0 | 35 | 0 | 0 |
| 1 Year (11 Issues) ... | 30 | 0 | 0 | 55 | 0 | 0 |

# போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து 34] 15 ஜூன் 1944 [மலர் 12

## பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை 1944. சென்ற மார்ச்சு-மீ நடைபெற்ற ஷை பரீட்சையில் நமது ஸெக்கண்டரி கிரேடு மாணவர்கள் எல்லோரும் தேறிவிட்டனர். நூற்றுக்கு நூறு சதவீதம்! நம் பாடசாலையில் ஸெக்கண்டரி கிரேடில் இவ்விதம் (Cent per Cent) தேர்ச்சி ஏற்பட்டது இதுவே முதல் தடவையாகும். எமது மனமார்ந்த மகிழ்ச்சியை அவர்களனைவர்க்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எலிமேண்டரி கிரேடில் வழக்கம்போல் நமது எலிமெண்டரி கிரேடு மாணவர்கள் திறமையுடன் தேறியுள்ளார்கள். (73 %) ஆனால் முந்திய வருடங்களைப்போல் இவ்வருட சதவீதம் அவ்வளவு உயர்ந்திராவிடினும் இம் மாகாணத்தின் ஏனை பாடசாலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் மாணவர்கள் போற்றத்தக்க விதயமாய்த் தேறியுள்ளனர் என்பது தெளிவாகும். ஆனது பற்றி தேறியுள்ள நம் எலிமெண்டரி கிரேடு மாணவர்க்கும் எம் மனமுவந்த மகிழ்ச்சி உரித்தாகும். இவ்வாறு மெச்சத்தகுந்த உயரிய விதமாய் உழைத்துத் தேறி வெற்றிபெற்றுள்ள நம் ஸெக்கண்டரி, எலிமெண்டரி கிரேடு மாணவர்கள் எல்லோருக்கும் எம் சந்தோஷத்தையும் வாழ்த்துதல்களையும் கூறுகின்றோம்.

ஷ பரீட்சையில் ஸெக்கண்டரி கிரேடில் முதன்மையாகத் தேறியுள்ள A. Philip Visvasam (54%; Second in the Presidency;) இரண்டாவதாகத் தேறியுள்ள M. Hirudayanathan (52%); எலிமெண்டரி கிரேடில் முதன்மை மார்க்கு பெற்றுள்ள D. Siluvaikitherian (54%); இரண்டாவதாகத் தேறியுள்ள M. A. Devasahayam (51%) ஆகிய இவர்கட்கு எம் மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் இவர்கட்கு நம் பாடசாலைத் தினக் கொண்டாட்டத்தன்று வழக்கம்போல் ஒவ்வொருவருக்கும் பதக்கப் பரிசு அளிக்கப்படும் என்பதையும் இதன்மூலம் அறிவிக்கின்றோம்.

ஷ பரீட்சை முடிவின் விவரங்களை மற்றோரிடத்தில் காண்க. தேறாதவர்கள் அவரவர் பெயருக்கெதிரில் குறித்துள்ள "குரூப்" (group) பாடங்களில் மாத்திரம் மறுபடி பரீட்சை எழுதவேண்டும்.

189993

## விகடம்

ஆசிரியர்:—ஏ. ஆர். பி. சங்கு ஊளையிடுகிறமாதிரி இன்னொரு உதாரணம் சொல்.

பாலு:—எங்க அப்பா...ஸார்...பாட்டு வாத்தியார்...ஸார்.

* * *

ஆசிரியர்:—டேய் சார்லஸ்! நீ வீட்டிலே ரொம்ப தொந்தரவு செய்கிறதாக உன் தகப்பனார் வழியிலே சொன்னாருடா?

சார்லஸ்:—அப்படி ஒண்ணும் இல்லை ஸார். நீங்கள் ப்ரைவேட் பணம் கட்டாயம் கேட்டதாகச் சொன்னேன்.

# சென்னை கல்வி இலாகா

## Public Examination at the end of VIII Stand. 1945

[Fort St. George Gazette, dated 18—4—1944; Page 222]

### The Tamil Text-Book (For Detailed Study)

VIII வகுப்பு முடிவுப் பரீட்சைக்கு-தமிழ்ப்பாட புத்தகத்தைப் பற்றிய ஸர்க்கார் அறிக்கை பின்வருமாறு :—

ஷை பரீட்சைக்கு, 1944-ல் ஏற்பட்டிருந்த தமிழ் பாட புத்தகமே மீண்டும் 1945-ம் ௵ பரீட்சைக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அப்புத்தகத்திலுள்ள "தனபாலன்" (வசனபாடம் பக்கம் 35—43) என்ற பாடமும், "தேசீயகீதங்கள்" 4 பாடல்களும் (பக்கம் 8 செய்யுள் பகுதியிலுள்ளது) நீக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த இரண்டு பாடங்கள் மாத்திரம் ஷை பரீட்சைக்குப் படிக்கவேண்டியதில்லை.

* * *

R. C. 16 E. 44 dated 12-5-1944 of the Secretary to the Commissioner for Government Examinations, Madras.

ஷை உத்தரவின்படி VIII வகுப்பு முடிவுப் பரீட்சைப் பாடங்களில் ஆங்கிலம் (English) ஒரு இஷ்டப்பாடமாக (Optional) ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளில் ஏற்படுத்தி இந்த இங்கிலிஷ் பாடத்திலும் பரீட்சை எழுதித் தேறியவர்களை, ஸெக்கண்டரி பாடசாலைகளில் IV பாரத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற டைரெக்டர் அவர்களது கோரிக்கையை அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டுவிட்டனர்.

ஆகவே, இனி VIII வகுப்பு முடிவுப் பரீட்சைப் பாடங்கள் ஏற்கனவே ஏற்பட்டிருப்பதுடன் "இங்கிலீஷ்" ஒரு இஷ்டப்பாடமாக இனி சேர்க்கப்படும். இந்த இங்கிலீஷ் பாடமும் சேர்த்து VIII வகுப்பு முடிவு பரீட்சை எழுதித் தேறினவர்களை ஸெக்கண்டரி பாடசாலைகளில் நேராய் IV பாரத்தில் சேர்த்துக்கொள்ளுவார்கள்.

இந்த உத்தரவு 1945-௵ பரீட்சை எழுதுபவர்களுக்கே அமுலுக்கு வருமாதலால், கூடிய சீக்கிரத்தில் ஷை பரீட்சைக்குரிய இங்கிலிஷ் டெக்ஸ்டு புத்தகம் (English Text) அரசாங்கத்தாரால் வெளியிடப்படும். இதுவரை ஷை பரீட்சைக்கு இங்கிலிஷ் பாட "ஸிலபஸ்" ஏற்படாததால், அந்த ஸிலபஸும் (Syllabus in English for Higher Elem. Schools) கூடிய சீக்கிரம் வெளியாகும்.

---

# R. C. Boarding and Training Institution, Trichinopoly.

## RESULTS

### Training School Certificate Examination, March 1944.

**Secondary Grade** (*Revised Scheme*)

| No. | Candidates Passed Name | Percentage of Marks |
|---|---|---|
| 607 | R. Varadarajalu ... | 49 |
| 608 | M. Hirudayanathan ... | 52 II |
| 609 | K. Subramanian ... | 47 |
| 610 | S. Appadurai ... | 51 |
| 611 | M. M. Amalraj ... | 46 |
| 612 | P. Antonymuthu ... | 43 |
| 613 | D. Maria Soosai Manickam ... | 47 |
| 614 | A. Stanislaus ... | 47 |
| 615 | K. R. Krishnan ... | 43 |
| 616 | S. Ramachandran ... | 43 |
| 617 | R. Vaithilingam ... | 48 |
| 618 | S. Natesan ... | 38 |
| 619 | V. S. Veerannan alias Lourdusami ... | 44 |
| 620 | G. Maria Victor ... | 45 |
| 621 | S. Vadivelu ... | 42 |
| 622 | A. Philiph Visuvasam ... | 54 I |
| 623 | S. Joseph Visuvasaraj ... | 44 |

**II Secondary Grade (Old Students)**

| No. | Candidates Passed Name | Percentage of Marks |
|---|---|---|
| 624 | S. Moses ... | 44 |
| 626 | Y. Maria Antony ... | 46 |
| 628 | A. Joseph ... | 43 |

**Elementary Grade** (*Revised Scheme*)

| No. | Candidates Passed Name | Percentage of Marks |
|---|---|---|
| 4568 | R. Arulandam ... | 49 |
| 4570 | A. Ignaci ... | 40 |
| 4572 | R. Santiago ... | 43 |
| 4573 | I. Madalaïmuthu ... | 43 |
| 4577 | R. Rajamanickam ... | 45 |
| 4578 | M. Ananthu ... | 33 |
| 4583 | K. Vaitheeswaran ... | 46 |
| 4585 | M. Swamikkannu ... | 40 |
| 4587 | M. Ponnunathan ... | 35 |
| 4588 | A. Arputhasami ... | 40 |
| 4589 | M. Maria George ... | 46 |
| 4591 | S. I. Lourdu ... | 48 |
| 4593 | U. S. Rayappan ... | 38 |
| 4594 | M. A. Devasagayam ... | 51 II |
| 4595 | M. Stanislaus ... | 40 |
| 4596 | A. Antonimuthu ... | 42 |
| 4597 | V. Michael ... | 37 |
| 4598 | D. Sammanasu ... | 38 |
| 4599 | R. Arputhamichael ... | 44 |
| 4600 | G, Dharman ... | 48 |
| 4601 | M. Ignacimuthu ... | 44 |
| 4602 | S. Leenus Fernando ... | 41 |
| 4603 | I. Soosaipragasam ... | 42 |

| No. | Candidates Passed Name | Percentage of Marks |
|---|---|---|
| 4604 | Arul Soosai Gnanam | 43 |
| 4605 | C. Michael | 39 |
| 4606 | S. Rajarethnam | 50 |
| 4607 | Y. Soosai Appadurai | 46 |
| 4609 | M. Arputham | 43 |
| 4610 | C. Antony | 40 |
| 4612 | Y. Pancras | 47 |
| 4613 | I. A. Soosai | 38 |
| 4614 | L. Antonyswami | 47 |
| 4615 | M. Dharman | 50 |
| 4616 | R. Savarimuthu | 36 |
| 4620 | S. Gnanapragasam | 38 |
| 4622 | S. Antonymuthu | 44 |
| 4625 | V. Arulswami | 38 |
| 4627 | S. Savarinathan | 43 |
| 4628 | I. Chinnasamy | 41 |
| 4629 | P. Dharmaraj | 42 |
| 3630 | M. Savarimuthu | 32 |
| 4631 | A. Kathiresan alias Gabriel | 43 |
| 4633 | R. Gnanapragasam | 39 |
| 4634 | S. Gnanapragasam | 40 |
| 4636 | A. V. Arokiam | 45 |
| 4637 | D. Devasagayam | 41 |
| 4638 | S. Jegadoss | 35 |
| 4639 | C. Lourdusamy | 36 |
| 4640 | I. Kitherian | 38 |
| 4641 | M. Marianathan | 42 |
| 4643 | K. Palanipandaram | 39 |
| 4644 | A. Subramanian | 32 |
| 4645 | S. N. Dharmalingam | 42 |
| 4646 | A. Sivalingam | 34 |
| 4647 | G. Velanganni | 46 |

| No. | Candidates Passed Name | Percentage of Marks |
|---|---|---|

**Revised Scheme** (*Old Students*)

| No. | Candidates Passed Name | Percentage of Marks |
|---|---|---|
| 4858 | I. Singarayan | 34 |
| 4940 | D. Soosai Raj | 36 |
| 4941 | D. S. Thomas Ponnusamy | 36 |
| 5149 | V. Ignaci | 38 |

**Old Scheme** (*Old Students*)

| No. | Candidates Passed Name | Percentage of Marks |
|---|---|---|
| 9587 | A. Thandavan | 43 |

**Revised Scheme**

| No. | Candidates Failed : Name | Group |
|---|---|---|
| 4569 | M. Ignacimuthu | B. C. |
| 4571 | V. Gnanadickam | A. B. C. |
| 4574 | S. Karaiyalan alais Lourdusamy | A. B. |
| 4575 | S. Perianayagam | B. C. |
| 4576 | Y. Savery | A. B. C. D. |
| 4579 | M. Amalorpavanathan | B. C. |
| 4580 | S. Arokiam | A. B. |
| 4581 | L. Selvaraj | A B, |
| 4584 | K. M. Antony | A. |
| 4586 | P. Devasagayam | B. C. |
| 4590 | S. Arputham | C. |
| 4592 | S. Lourdusamy | A. B. C. |
| 4608 | S. Francis | A. |
| 4611 | E. Thathan | A. B. C. |
| 4617 | I. Gnanapragasam | A. B. D. |
| 4618 | R. Alagarisami | A. |

| No. | Candidates Failed: Name | | Group |
|---|---|---|---|
| 4619 | I. Velanganni | ... | A. B. |
| 4621 | P. Sandanam | ... | B. D. |
| 4623 | S. Thomas | ... | A. |
| 4624 | M. Palanyandi | ... | A. C. |
| 4626 | S. Devadoss | ... | B. D. |
| 4632 | N. Jebamalai | ... | C. |
| 4635 | K. R. Arokiam | ... | C. |
| 4642 | V. Paul Muthusamy | ... | B. |

| No. | Candidates Failed: Name | | Group |
|---|---|---|---|
| | **Revised Scheme** (*Old Students*) | | |
| 4648 | S. Thomas | ... | B. |
| 4649 | S. Belevandram | ... | A. C. |
| 4650 | A. Soosaimanickam | ... | B. |
| 4651 | M. Antonisamy | ... | A. |
| 4942 | M. Arokiam | ... | A. C. |

**N.B.**:—Elem. Grade:—Group A:—(1) Child Nature. (2) School Administration. Group B:—Language (Methods and Texts). Group C:—(1) Methods Mathematics. (2) Methods Naturestudy. Group D:—(1) Methods Indian History. (2) Methods Geography. (3) Rural Social Problems.

# லிகிதம்—ஒரு கலை

நம் எண்ணங்களைப் பேச்சுவாயிலாகவும் எழுத்துமூலமாகவும் வெளிப்படுத்திவருகின்றோம். அவ்வெண்ணங்கள் அல்லது கருத்துக்கள் உணர்ச்சிகள் தோன்ற திறமையுடன் வெளிப்படும்போது—சொல்வன்மையினால் சிறப்புற்று விளங்கும். அதில் ஒருவித இன்பம் தொனிக்கும். அதை ரஸமான பேச்சு என்போம். இந்தச் சுவையின் காரணத்தால் அது கலையாகின்றது.

அவ்வண்ணமே நம் எண்ணங்களும் எழுத்துமூலம் வெளிப்பட்டு, உணர்ச்சிகள் ததும்ப பொலிவுற்றுச் சிறப்படையும்போதும் அதில் ரஸம் நிரம்பி இருக்கும். மனதை உருக்கும்; அதை ரஸமான லிகிதம் என்போம். இச்சுவையின் காரணத்தால் லிகிதம் கலையாகின்றது. எனவே, லிகிதம் கலையாய் சிறப்பெய்துவது இலக்கியத்தின் மேன்மையை உணர்த்துவதாகும்.

மேல்நாடுகளில் லிகிதக்கலை இலக்கியத்தின் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்பட்டுவருகிறது. உதாரணமாக Goldsmith, Lord Chesterfield முதலிய எழுத்தாளர்கள் தங்கள் சொந்த தாய் தந்தை மக்களாகியவர்கட்கு எழுதின கடிதங்கள் ஆங்கில இலக்கியத்தில் சிறந்து விளங்குகின்றன. எழுத்து வன்மைபொருந்திய காரணத்தால் அவற்றில் ரஸம் ததும்புகிறது. கலையாய்ப் பொலிவுறுகின்றன. நம் நாட்டிலும் அத்தகைய எழுத்தாளர்கள் இருக்கின்றனர். உதாரணமாக பண்டிட் ஜவஹர்லால் நேரு, கனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார், பாபு அரவிந்தர் முதலியவர்கள் தங்கள் உறவினர்க்கும் நண்பர்களுக்கும் எழுதியுள்ள நிருபங்கள் கலையாய் விளங்குகின்றன. ஆனால் இவையெல்லாம் ஆங்கிலத்தில் உள்ளன. சில மொழிபெயர்க்கப்பட்டும் வருகின்றன.

நம் தமிழ்நாட்டிலும் காலஞ்சென்ற பாரதியார், உ. வே. சுவாமிநாதய்யர் முதலிய பெரியார்கள் தங்கள் கடிதங்களைக் கலையாக்கியிருக்கின்றனர். காந்திஜியவர்களது பற்பல பகிரங்கக் கடிதங்கள் (பற்பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டவை) கலையாகிப் பொலிந்திருப்பதைக் கண்கூடாகக் காணலாகும்.

ஆனால் இந்த லிகிதக் கலை நம் நாட்டில் இன்னும் அதிகமாய் வளரவேண்டும். வன்மை வாய்ந்த எழுத்தாளர்கள் வெகு சிலரேயுளர். நம் தாய்மொழி வளரவும் அதனால் நம் இலக்கியம் சிறக்கவும் இக்கலை இன்னும் அதிகமாய் வளரவேண்டும். ஆனது பற்றி ஆசிரியர்களாகிய நமது கடமை தெளிவாய் இருக்கிறது.

மேலும் லிகிதம் சிறப்புறுவதற்கு முக்கிய காரணங்கள்: எண்ணங்கள் தெளிவாய் இருத்தல்; அவை தெள்ளிய நடையில், எளிய மொழியில் வெளிப்படுதல்; உணர்ச்சிகள் உருகுலையாமல், இயற்கை எழிலுடன் வெளித் தோன்றுதல், சுற்றிச்சுற்றிப் போகாமல், நேராய், சீராய், மாசற்ற விதமாய்ப் பொலிவுறுதல் முதலியன. இத்திறமைகளைப் படிப்படியாய் மாணவர்களிடம் வளர்க்கவேண்டும்.

நம் ஆரம்பப் பாடசாலைப் பாடத்திட்டம் கூறுவதுபோல், ஆரம்ப வகுப்புகளில் தொடக்கத்தில் பிள்ளைகளுக்குப் பேச்சுப் பயிற்சியளிக்க ஏராளமான சந்தர்ப்பங்கள் தரவேண்டும். பிள்ளைகள் தங்கள் எண்ணங்களை தாராளமாக வெளிப்படுத்தட்டும். மேல் வகுப்புகளிலும் இவ்வேலையைத் தொடர்ந்து செய்து பின்னர் மாணவர்களை சுயமாய் எழுதப்பழக்கவேண்டும். "நன்றாய்ப் பேசிப் பழகி; நன்றாய் எழுதிமுடி". என்பதை மறக்கவேண்டாம்.

சாதாரணமாய், வர்ணனைக் கட்டுரைகள், சமூகக்கடிதங்கள், வியாபாரக் கடிதங்கள்போன்றவற்றை நாம் கவனித்துவருவதோடு, மாணவர்கள் தங்கள் உணர்ச்சிகள், எண்ணங்கள், விருப்பங்கள் முதலிய மனப்பண்புகளை வெளிப்படுத்தவல்ல எழுத்து வேலையையும் நாம் அதிகம் கவனிக்கவேண்டும். நிரூபம் வரைதலில் (Letters of Personal character) இன்னும் அதிகமான பயிற்சியளிக்கவேண்டும். உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் (VI, VII, VIII வகுப்புகள்) இவ்விஷயம் நன்கு கவனிக்கப்படவேண்டும். ஐந்தாம் வகுப்பிலேயே, மாணவர்களை மேற்கூறியபடி சுயமாய் எழுதத் தூண்டுவது நலம்.

மேற்கூறிய இலக்ஷியம் கைகூடுவதற்கு மேல்நாட்டு, நம்நாட்டு சிறந்த எழுத்தாளர்களது கடிதங்களை (மொழிபெயர்த்து) மாணவர்கட்கு அறிமுகப்படுத்தவேண்டும். நம் நாட்டுப் பெரியார்களது ஜீவியசரித்திரம், சுயசரிதை இவற்றைச் சேகரித்துத் தரவேண்டும். அவற்றுள் நமக்குத் தேவையான லிகித உதாரணங்கள் மலிந்திருக்கின்றன. மேலும் "கலைமகள்" போன்ற உயரிய தமிழ் சஞ்சிகைகளை மாணவர்கள் வாசித்தறிய சந்தர்ப்பமளிக்கவேண்டும். ஏன் நம் ஆசிரியர்களே சுயமாகவே மாதிரி லிகிதங்கள் மாணவர்கட்கு எழுதிக் காட்டக்கூடாது?

---

## யோசனைக் கணக்கு

(ஞா. வி. அப்பாவு கீழமுடிமன்)

| | | |
|---|---|---|
| 8 | 3 | 4 |
| 1 | 5 | 9 |
| 6 | 7 | 2 |

இந்தக்கட்டங்களைக் கவனியுங்கள். இதில் குறுக்காகவும், நெடுக்காகவும், மூலவிட்டமாகவும் (diameter) கூட்டுங்கால் கூட்டுத்தொகை 15 சமமாகவே வருகிறது. இதேபோல் 5 கட்டங்களிட்டு அதில் 1—25 வரை உள்ள எண்களை உபயோகித்து கூட்டுத்தொகை 65 சமமாக எப்பக்கங்களிலும் வரும்படியாகப் பூர்த்தி செய்யுங்கள் பார்ப்போம். ஒருதடவை ஒரு கட்டத்திற்கு உபயோகித்த எண்ணை மறு கட்டத்திற்கு உபயோகிக்கக் கூடாது. "0" என்ற எண்ணை உபயோகிக்கக்கூடாது.

---

## 1-ம் 2-ம் வகுப்பு

### இயற்கைப் பாடம்

**நோக்கம்:** மரம், செடி, கொடிகளைத் தெரிந்துகொள்ளுதல். (மாணவர்களின் உற்றுநோக்கும் திறமையை வளர்த்தல்).

**இடம்:** வெளிப்பாடம்—பாடசாலை காம்பௌண்டு, அல்லது அருகிலுள்ள குளக்கரை, ஏரிக்கரை, அல்லது தோப்பு அல்லது தோட்டம்.

**போதனுமுறை:** பாடசாலை காம்பௌண்டில் இப்பாடம் நடத்துவதாக வைத்துக்கொள்வோம்: பின் வருவனபோன்ற கேள்விகள், பயிற்சிகள் மூலமாய்ப் பிள்ளைகளின் புலன்களை—முக்கியமாய் அவர்களது உற்று நோக்கும் சக்தியை விருத்தி செய்வதே—முறையாகும்:—

ஷெ ஸ்தலத்தில் உள்ள—பிள்ளைகளுக்குத் தெரிந்த, மரங்கள், செடிகொடிகளின் பெயரைச் சொல்லச்செய்து ஒருவாறு அவர்களது முன்அறிவைத் தெரிந்துகொள்ளவும். பிறகு கீழ்வருவன போன்ற சில கேள்விகளைப்போட்டு விடை கூறச்செய்யவும்.

1. வேப்பமரம், புளியமரம்—இவற்றில் எது பெரியது? எப்படி?

2. தென்னைமரம், வேப்பமரம்—இவற்றுள் எதற்குக் கிளைகள் இருக்கின்றன?

3. புளியமரத்தின் பக்கத்தில் ஒரு தும்பைச்செடி இருப்பதைப் பார்—பக்கத்தில் ஒரு காட்டாமணக்குச்செடி இருப்பதைப்பார்—இந்த இரண்டு செடிகளில் எது பெரியது?

4. இந்த வேலிமேல் ஒரு கொடி ஓடுகிறதே அதன் பெயர்—உனக்குத் தெரியுமா? இந்த மரத்தின் பக்கத்தில் நீ பார்க்கிற மற்றொரு கொடியின் பெயர் உனக்குத் தெரியுமா?

(வேலிப்பருத்தி, ஓணன்கொடி, அவரை அல்லது மொச்சை—முதலிய கொடிகளைக் காண்பிக்கவும்.)

**அப்பியாசம்**—(1) பின் வருவன மரமா, செடியா, கொடியா? ஆல், ஆமணக்கு, தென்னை, பருத்தி, அவரை, வேம்பு,...முதலியன.

(2) பின் வருவன சரியா—தப்பா?—வேலிபருத்தி ஒரு மரம். ஊமத்தம் ஒரு மரம். வேப்பமரம் ஒரு கொடி. ஆமணக்கு ஒரு கொடி......முதலியன?

(3) தென்னை மரத்துக்குக் கிளைகள் உண்டு.

(4) புளிய இலைகள் பூவரசம் இலைகளைவிட பெரியவை.

(5) தென்னையைவிட, ஆமணக்கு அதிக உயரம்?—முதலியன

கதை—(உதாரணம்) "புளிய மரத்தில் குரங்கு செய்த விநோதம்" (ஏதாவது ஒரு கட்டுக்கதை.)

பாட்டு—(தென்னைக்கும்-ஆமணக்குச் செடிக்கும்) சம்பாஷணை நடந்ததுபோல்—ஒரு பாவனைப் பாட்டு தயாரித்து—பாடவும்.)

கை வேலை—தேங்காய் போன்ற ஏதாவது ஒரு பொருளை (பாட சம்பந்தமாய்) களிமண் வேலை செய்யச் சொல்லவும்—செய்து காட்டவும்.

[குறிப்பு] கீழ் வகுப்புகளில் இயற்கைப் பாடம் போதிக்கும் போது மேற்கூறியபடி—புலன்களின் பயிற்சியைக் கவனித்து, பாட சம்பந்தமான கதை, பாட்டு, கைவேலை — ஆகியவற்றை இணைத்துப் போதிக்கவேண்டுமேயன்றி வெறும் விஷயம் மாத்திரம் தகாது.

---

## சிறு கதை

## "அகந்தை ஆகாது"

### (Z. L.)

மிருகேந்திரனுக்கு (சிங்கம்) கஜேந்திரன் (யானை) மந்திரி. நம் சிங்கராஜாவின் மந்திரி யானைக்கு கர்வத்தால் கண் தெரியவில்லை. ஏனென்றால், யானை அடிக்கடி மனோராஜ்யம் செய்வது வழக்கமாம், அதுசமயம் அதன் பலம், உருவம், தைரியம், கனம், பதவி—அது தான்-மந்திரிபதவி. இவைகளின் ஞாபகம் வரும்பொழுது அப்படியே கண் மங்கி விடுகிறதாம். அப்பொழுது தன்னையன்றி அந்தக்காட்டில் வேறு ஏதும் இல்லை என்றுதான் எண்ணுமாம். மற்ற மிருகங்களெல்லாம் அற்ப தூசிபோல் தோற்றமளிக்கின்றனவாம். அதனால் யானை எந்த மிருகத்தையும் இலட்சியம் செய்வதில்லை. தான் இட்டதே சட்டமாய், தர்பார் நடத்தி வந்தது.

இதனால் யானை என்றால், மற்ற மிருகங்களுக்கு எள்ளளவும் ஆவதில்லை. "சனியன் எப்பொழுது தொலையும் தலை எப்பொழுது முழுகலாம்" என்று ஒவ்வொரு மிருகமும் எண்ணிற்று.

இத்தனைக்கும் நரி ஏன் சும்மாயிருக்கிறது என்பதுதான் எல்லா மிருகங்களுக்கும் பெருத்த சந்தேகமாயிருந்தது. ஏனென்றால், நரிக்கு அநியாயம், அக்ரமம் என்றால் ஆகாது. யாராயிருந்தாலும் ஒரு கை பார்த்துத்தான் விடும். தவிர தன் தந்திரங்களையும் சாமர்த்தியத்தையும் பயன்படும் வகையில் பிரயோகித்துப் பல

189993

நன்மைகள் செய்து, அக்காட்டிற்கு நரி ஓர் பரமோபகாரியாய் விளங்கிற்று. இதனால் மற்ற மிருகங்களிடம் ஏன் சிங்கராஜாவிடமும், நரிக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. இந்த விஷயம் யானைக்குத் தெரியாமலில்லை. தெரிந்தும் "கேடுவரும் முன்னே மதிகெட்டு வரும் பின்னே" என்பதாக யானை நடந்து வந்தது.

ஒரு நாள் ஞானியார் பூனை இறந்ததைக் குறித்து அநுதாபக் கூட்டம் நடைபெற்றது. சிங்க ராஜாவுக்கு ஜலதோஷம் என்ற காரணத்தால் கூட்டத்திற்கு வரமுடியாமற்போகவே, மந்திரியாரே மலையைப்போல் அமர்ந்து தலைமை தாங்கிற்று. ஞானியாரின் ஜீவியத்தைப்பற்றி ஒட்டைச்சிவிங்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றியது. பின் பல தீர்மானங்கள் நிறைவேறின. கடைசியாய் நரி எழுந்து நின்று, "சகோதரர்களே! இறந்துபோன ஞானியார் பூனையின் மட்டில் நமக்குள்ள அன்பையும் அநுதாபத்தையும் காட்ட, அதன் கல்லறையைச்சுற்றி ஓர் பூந்தோட்டம் வைத்துப் பூஷணமாகக் காப்பாற்றி வரவேண்டும் என்பது என் அபிப்பிராயம்," என்று சொன்ன உடனே, எல்லா மிருகங்களும் விழுந்து விழுந்து ஆமோதித்தன. பின்னும் நரி தொடர்ந்து, இன்னும் என் முடிவான யோசனையையும் சொல்லிவிடுகிறேன் என்று சொல்லத்தொடங்கி; "அடுத்துவரும் திங்களில், எல்லோரும் தங்களுக்குக் கிடைக்கும் நவீனமான புஷ்பச் செடிகளையெல்லாம் கொண்டுவரவேண்டும். முயல், பன்றி, எலி, நரி, எறும்பு, நண்டு என்ற இனத்துக்கு இருபது பேர் கூடி, நிலத்தை உழுது பண்படுத்தவேண்டும். நாமெல்லோரும் கூடிச் செடிகளை நடுவோம். தண்ணீர் ஊற்றுவதற்கு நம் மந்திரியார் இருக்கிறார். வேறு எவராலும் அந்த வேலை சாத்தியமாகாது." என்று முடித்தது. அநுதாபக்கூட்டம் என்பதையும் மறந்துபோன மிருகங்களின் பலத்த கரகோஷத்தினிடையே அது உட்கார்ந்தது.

மந்திரியார்க்கோ அசாத்தியமான கோபம். முகத்தில் ஈயாடவில்லை. அந்த நரியை அப்படியே......என்று எண்ணும்போதே, ஏதோ நினைவு வந்து கோபத்தை அடக்கிக்கொண்டது. வேறு வழியில்லை என்று கண்டு தன்னைச் சமாளித்துக்கொண்டு எழுந்துநின்று, "சகோதரர்களே! நீங்கள் செய்த இந்தத் தீர்மானம் மெச்சத்தகுந்ததே. நம் ஞானியார் அவர்களுக்காக இந்த அற்ப உதவியைச் செய்ய, நானா பின்வாங்குபவன்? ஆகவே இத்தீர்மானத்தை என் முழுமனதோடு ஆதரிக்கிறேன்" என்றது. காரியதரிசி கரடியும் தன் குறிப்புப் புஸ்தகத்தில் இதையே முதல் தீர்மானமாக எழுதிக்கொண்டது.

கூட்டமும் ஒருவாறு கலைந்தது. தோட்டமும் போட்டாயிற்று. தினமும் துதிக்கையில் தண்ணீர் நிரப்பிக்கொண்டுவந்து செடிகளுக்கு ஊற்றுவதற்குள், உயிர் தப்பினால்போதும் என்றாகிவிட்டது யானைக்கு.

இப்போது மிருகங்களெல்லாம் மந்திரியாரைப்பற்றி என்ன எண்ணுகின்றன. யானைமாத்திரம் என்னவோ தைரியத்தை இழந்துவிடாமல், கண்ணியமாக நடந்துவருகிறது. முன்போல் ஒன்றும் கெடுபிடி செய்வதில்லையாம். மிருகங்களும் பரமதிருப்தியாய் வாழ்கின்றனவாம்.

---

## சில மீன் வகைகள்

(A. Arulanandam, Vannampatti.)

திட்டமான பெரும் வாளை, சேற்கெண்டை, திறமான விரால், வெண்கெண்டை, வெள்ளுளுவை, கட்டக்கெழுத்தி, கருங்குறவை, சென்னல் கானன்கழுத்தை, விலாங்கு, கல்லாரால், ஒட்டப்புணர், கெளிர், உளுவை, தலைப்பிறட்டை, உன்னித பேரராரால், ருசிகர மைரை, துட்டத்தேள்கொடுக்கி, தோகை போடித்தோலி, துள்ளுசேற்கெண்டை, சாணிக்கெண்டை, பறவை, மட்டுமிதமில்லா சார்முட்டி, சிறுகெண்டை, மாளாத அயிரை, ஆரால், சித்தாரால், குட்டக்குறவை மீன்; குறுங்கெண்டை, சீளிகொம்பன் சுறு, அம்பட்டன் கெண்டை, வட்டவெளவால், சிறு வாளை, பெருவாளை, வண்டுரால், மோட்டுரால், சென்னக்கூனிகள், அட்டதிருக்கை, கல்திருக்கை, மீன் திருக்கை, அஞ்சாத மகர மீன், திமிங்கிலம், கொடுவாள், பெட்டைத் திருக்கை, செந்திருக்கை, பெருந்திருக்கை, பெரிய கொடுவா, நெடுவா, மாட்டுத் திருக்கை, கொட்டியான் உரிபாரை, பாரை, செம்பாரை, கோலா மீன், உல்லமுடன் குருவி திருக்கை, சட்டமான மடவைக்கெண்டை, சீப்பிறட்டை, சதுரானமோகனம், வெள்ளைராவேளா, திட்டமான பால்திருக்கை, கருந்திருக்கை, திறமான பால்சுறு, திமிங்கிலம், கொடுவா, மட்டத்திருக்கை, மாம்பழத்தோலி, மாராதநெத்திலி, சுரும்பு, கருவெளவால், கொட்டமுறம்கொள்ளி, காலாகுழங்கான், கொருகு, பொய்க்கண், புள்ளிதப்பு,த்திருக்கை, கட்டையோலைவாளை, கார்த்திகை வாளை, கத்தளை பணங்கெண்டை, கருவஞ்சணமும் சிட்டாய் பறக்குமாள்காட்டி, சேள்கெண்டை, சிறுகெண்டை, குறுங்கெண்டை, குண்டுமணிச்சேல், சட்டமான தேங்காய்ப்பாரை, வெண்கண்மீன், சதுரமான உரிபாரை, மூத்திரதிருக்கை, கட்டப்பாரை, உமிப்பரை, கல்திருக்க்கை, கருஞ்சுறு, நெய்த்தோலி, உருட்டான், பாரைமீன், மட்டிச்சுறு, மொத்தப்பாரை, மயிரை, மாட்டுச்சுறு, சிங்கராலுமிப்பாரை.

---

# நெடுநாள் வாழ்வதெப்படி?

நீண்டநாள் இவ்வுலகில் ஜீவிக்க விரும்பாதார் இல்லை. "சிரஞ்சீவியாயிரு" என்று நம் முதியோர்கள் நமக்கு ஆசியும் கூறுகிறார்கள். ஆகவே ஆயுளை விருத்திசெய்ய யாவரும் ஆசைப்படுகிறார்கள். ஆனால் அதற்கான வழிகளை அறிய முற்படுவதில்லை. அறிந்தாலும் அநுஷ்டிப்பதில்லை.

நெடுநாள் வாழ்வதெப்படி? உணவைப்பற்றி பற்பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றைப் பொதுவாக இரு பிரிவில் அடக்கலாம். (1) தேகத்துக்கான உணவு ஆராய்ச்சி (2) மனப் பண்புக்கான ஆராய்ச்சி. தேகமும் மனமும் சேர்ந்தே இயங்குவதால் இருவகை ஆராய்ச்சியின் பலன்களும் நாம் அறிந்து ஒழுகவேண்டும்.

மிதமான—மட்டுக்கு மிஞ்சாத பழக்க வழக்கங்களே ஆயுளை நீடிக்கும் வழிகளில் சிறந்ததாகக் கருதப்படுகிறது. உலகத்தில் நூறு வருஷத்துக்கு மேல் ஜீவித்த மக்களின்-வாழ்க்கையைப் பரிசீலனை செய்ததில் அவர்கள் மிதவாழ்க்கையைக் கைக்கொண்டிருந்தார்கள் என்பது புலனாகிறது. அவர்கள் உண்டு வந்த உணவும் எளிமையாகவேயிருந்ததாம். அன்னபானாதிகளில் மட்டுக்குமிஞ்சி உண்ணும் வழக்கம் ஒருபோதும் இல்லையாம்.

மிதாசாரமும் மித உணவும் மனதை ஒருவழிப் படுத்தவும் "உள்நின்று உழற்றும் பசியை" அடக்கியாளவும் பெரிதும் பயன்படும். காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குறும்புகளை நீக்க உதவும். தீய எண்ணங்கள் மனதைக் குலைக்காது தேகத்தைப் பாழ்படுத்தாது காக்கும். வாழ்நாளைக் குறுக்கும் கெட்ட மனக்கிளர்ச்சிகளைத் தலைகாட்டாது ஒழிக்கும்.

அடுத்தாற்போல சமதிருஷ்டியும் சந்துஷ்டியும் ஆயுளை விரும்புவோர் பெறல் வேண்டும் "போதுமென்றமனமே பொன் செய்யும் மருந்து". கடைசியாக எங்கும் நிறைந்தொளிரும் இறைவனிடம் பக்தி கொண்டு ஒழுகவேண்டும்.

நீண்டநாள் வாழ்ந்த அமெரிக்க மாது, "எவ்வாறு நூறு வருஷத்துக்கு மேல் வசித்தாய்?" என்ற வினாவுக்குத் தான், சோளரொட்டியும் உருளைக்கிழங்கும் சாப்பிட்டுவந்ததாகக் கூறினாளாம். சிரியாவிலுள்ள ஓர் ஆண்மகன், நூற்றுப்பதின்மூன்று ஆண்டு வசித்ததின் மர்மத்தை விளக்கச்சொன்னபோது தான் ரொட்டியும் அத்திப்பழமும்தான் சாப்பிடுவது என்றும் தண்ணீரும் பாலும் தவிர வேறொன்றும் அருந்துவதில்லையெனவும் பகர்ந்தானாம்.

வயது செல்லச் செல்ல விசேஷித்த உணவு வகைகளை நிறைய புசிக்கவேண்டுமென சிலர் எண்ணுவது பெரும் பிழையாகும். அவ்வாறு உண்பது ஜீரணக்கருவிகளைக் கெடுக்கும் விஷப் பொருள்களை உடலில் பெருக்கும் "மீதூண் விரும்பேல்" என்பதைக் கவனிக்க வேண்டும். ஆயுளைப்பெருக்க பத்துவித பிரதிக்ஞைகள் எடுத்துக்

கொள்ளவேண்டும். பாப வழியினின்றும் காத்து பரமபதம் அளிக்கும் தசவித ஈசுவரக்கட்டளைகளைப்போல இவற்றைப் போற்றல் வேண்டும்.

1. வீட்டை காற்றுப் புகவும் ஒளிபரவவும் ஏற்றபடி அமைத்தல்

2. பொழுது போக்குகளையும், அலுவல்களையும் திறந்த வெளியில் செய்ய நாடுதல்.

3. கூடுமானவரை வெளியே தூங்குதல்.

4. நிமிர்ந்து நடத்தல், உட்காருதல், நிற்றல் இவற்றில் பழக்கம் கொள்ளுதல். ஆழ்ந்து சுவாசித்தல்.

5. புலாலையும் வாசனைத்திரவியங்களையும் உணவில் மிதமாக உபயோகித்தல். விலாப்புடைக்க உண்ணாதிருத்தல்.

6. நன்றாக மென்று சுவைத்து உன் ஆகாரம் கொள்ளு முன்னும் அதன் பின்னும் பல், ஈறு, நா இவைகளைச் சுத்தம் செய்தல்.

7. விஷப்பொருளையும் நோய்க்கிருமிகளையும் உடம்புக்குள் செல்லவிடாதிருத்தல்.

8. மிகுதியும் வேலைசெய்வதைத் தவிர்த்தல். தேவைக்குத் தக்கவாறு 7 மணி முதல் 9 மணி நேரம் நித்திரை செய்தல்.

9. குடலைச் சுத்தமாக வைத்திருத்தல்.

10. சினத்தையும், கவலையையும் அறவேயொழித்து சம மனப் பான்மையுடனிருத்தல்.

---

## விடுகவிகள்—இது என்ன?

1. வேலி இல்லாத தோட்டத்திலே, விரும்பி நடாத செடியிலே, பூத்ததுபோல் இருக்கும் மலர் என்ன மலர்.

2. செடியில் சிவப்பு, மரத்திலே கோணல், ஆற்றிலே வெள்ளை.

C. Abraham.

* * *

3. அட்டைக்கு ஆயிரங்கண், முட்டைக்கு மூன்று கண், அண்ணமலைச்சாமிக்கு ஒரே கண்.

4. சுட்டகருவாடு நட்டமே நிற்கிறது. M. Santiagu.

* * *

5. மஞ்சள் பெட்டி, மறக்காத பெட்டி, ஒரு நாளும் திறக்காத பெட்டி.

6. பள்ளிக்கூடம் போகிற பட்டம்மாளுக்கு தலையிலே ஒரு "டை"; வாயிலே ஒரு "டை"; கையிலே ஒரு "டை".

ஞா. வி. அப்பாவு.

---

# ஆரம்ப வகுப்புகளில் கதைசொல்வதெப்படி?

[G. V. Natarajan, Kolappalur]

கதைசொல்வதில் முதன்மையாகக் கருதத்தக்கது கேட்பவரின் வயது, வளர்ச்சி, அறிவு ஆற்றலுக்கு ஏற்றவாறு கதையைத் தேர்ந்தெடுப்பதேயாகும். ஒரு சிறுவன் தன் வாழ்க்கையளவிலும், தன்னைச் சுற்றி நடைபெறும் காரியங்களிலும் ஒவ்வொருநாளும், தான் சம்பந்தப்பட்டிருக்கும் விஷயங்களிலும், தான் சாதாரணமாகப் பார்த்துத் தெரிந்து பழகும் விஷயங்களிலுமே கருத்துடையவனாயிருக்கிறான். இத்தகைய குழந்தைகள் தங்களைப்பற்றி, தாங்கள் செய்யும் காரியங்களைப்பற்றியுள்ள கதைகளைக் கேட்கப் பெரிதும் விரும்புகின்றனர். உண்மைக்கதை, கற்பனைக்கதை, மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டுள்ள கதைகளைத் தேர்ந்தெடுப்பது ஆசிரியரது நோக்கமாக இருக்கவேண்டும். குழந்தைகள் கட்டுக்கதைகளைக் கேட்டு சந்தோஷப்படக்கூடும். ஆனால் அக்கதைகளுள் அச்சமோ, துன்பமோ எழும்புகின்றவைகளைக் கவனமாக ஒழித்தல்வேண்டும்.

கதையைப் படித்துக்காட்டுவதிலும், சொல்வதே சிறந்த முறையாகும். கதையைப் படிப்பதால் விரும்பிய அளவு பயன் கிடைக்காது. கதை சொல்லும்போது அக்கதை ஆசிரியரது கதையாகவே மாறிவிடுகிறது. அவரது தோற்றம் கதைக்கு உருவளிக்கிறது. கதையை எடுத்துச் சொல்வோர்க்கும், கேட்கும் மாணவர்களுக்குமிடையில் கூட்டுறவு நெருங்கி வலுக்கிறது. வகுப்பில் கவனம் மிகுதிப்பட்டு மனம் அங்கும் இங்கும் ஊசலாடாமல் கதையிலேயே செல்லுகின்றது. வகுப்பில் அமைதி எளிதில் நிலவுகிறது. ஆசிரியர் கண்கள் வகுப்பிலுலாவவேண்டியபோது உறுப்புக்கள் நடிக்க, வாய் கதைசொல்ல இருப்பதென்றால் அக்கதையை, படம்பிடித்துக்காட்டுவதுபோல நிகழ்ச்சிகள் நிரம்பியதாய் இருக்கவேண்டும். கதை நிகழ்ந்த காலத்து இருந்த நாடு, பட்டணம், மக்கள் முதலியவற்றைப் பற்றிய வரலாறு உள்ளது உள்ளபடியே கூறப்படவேண்டும். கதைகள் உணர்ச்சி நிரம்பியனவாய் மாணவர்களது உள்ளத்தை இழுப்பனவாய் இருக்கவேண்டும்.

கதை சொல்லும் ஆசிரியருக்கு முதலில் கதையின்மீது பிரியம் இருக்கவேண்டும். தான் ஒரு அதிகாரி என்ற உணர்ச்சி மிக்கவனாய் இருந்தால் நன்றாய் கதை சொல்லமுடியாது. குழந்தைகளோடு தானும் ஒரு குழந்தையாகப் பாவித்துக்கொண்டுதான் சொல்லவேண்டும். கதையில் தானும் ஈடுபட்டு இருந்தால்தான் ஆசிரியன்

கதை சொல்லமுடியும். மேலும் அக்கால சம்பவங்களை மனக்கண்ணுல் பார்க்கும் கற்பனையும்வேண்டும்.

ஆசிரியர் கதையைப் பாடம் செய்துகொண்டு வரவேண்டிய தில்லை. ஒப்புவிப்பதைக்காட்டிலும் தமக்கு அப்பொழுது வந்து கொண்டிருக்கும் வார்த்தைகளாலேயே கதை சொல்வதில் உயிர் உண்டு. புத்தகத்தை அடிக்கடி பார்த்துக் கதை சொன்னுல் மாண வர்களுக்கு ஊக்கம் குறைந்து, கதையில் வெறுப்புத்தட்டும். மாண வர்கள் சிறியவர்களாய் இருப்பதால் பேசும்நடை தெளிவாகவும், எளி தாகவும் இருக்கவேண்டும். கண்களுக்கு எதிரில் நடப்பதுபோலவே கதைகள் சொல்லவேண்டும். அச்சமயத்தில் ஆசிரியன் உணர்ச்சி ததும்பம்படியான குரலில் எடுத்தல், படுத்தல், நலிதல்களை அமைத் தலோடு நடித்தலினுலும் மாணவர்கள் கவனத்தை இழுக்கலாம். இடையிடையே கேள்விகளும் திருப்பிக் கூறலும் வேண்டும்.

---

## இருசொல் அலங்காரம்

(V. Natesan H. M. Thirukkampuliyur.)

1. வீடு சிறப்பதேன்?
   விருந்தினர் மகிழ்வதேன்?—பலகனியால்.

2. பயிர்கால் செழிப்பதேன்?
   பலசாலி நலிவதேன்?—கவலையால்.

3. விண்மீன் ஒளிப்பதேன்?
   வீண்செலவு செய்வதேன்?—மதியற்றதால்.

4. தமயந்தி நளனை மணந்ததேதனுல்?
   தணியா பசி தீர்ந்ததேதனுல்?—அன்னத்தால்.

5. தண்ணீர் ஓடுவதேன்?
   தழைத்த செடி மடிவதேன்?—வாட்டத்தால்.

6. புளிச்சேப்பம் வருவதேன்?
   பூமி குளிர்வதேன்?—மந்தாரத்தால்.

---

## உங்களுக்குத் தெரியுமா?

1. மிகப் பெரிய எண்ணெய் குழாய்:—உலகத்திலேயே இதுவரையில் கட்டப்பட்ட எண்ணெய் குழாய்களில் மிகப்பெரிது பென்ஸில்வேனியாவில் (U. S A.) கட்டப்பட்டிருக்கிறது. 10 மாகாணங்களின் குறுக்கே 13 நதிகளின் கீழும் 8 மலைகளை ஊடுருவியும் செல்லுகிறது. இதன் நீளம் 1388மைல் அதாவது ஏறக்குறைய டில்லியில் இருந்து கன்னியாகுமரி வரையில் உள்ள தூரம். இதன் குறுக்களவு 24 அங்குலம். இது யுத்த முயற்சிக்குப் பெரிதும் உதவியாயிருக்கிறது. இந்தக் குழாய் மூலம் நாளொன்றுக்கு நாலுலட்சம் பீப்பாய் எண்ணெய் கொண்டுபோகலாம். இவ்வளவு பெரிய நிர்மாண திட்டத்தை 350 நாளில் கட்டி முடித்துவிட்டார்களாம்.

2. ஆங்கிலம்:—உலகத்தின் ஜனத்தொகையில் பதினைந்து சதவிகிதம்தான் ஆங்கிலம் பேசுபவரும் படிப்பவரும் இருக்கிறார்களாம். ஆனால் உலகத்தில் உள்ள புத்தகங்களில் எழுபத்தைந்து சதவிகிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறதாம்.

E. Paul Natesan.

3. எப்படி ஈ வழவழப்பான இடத்திலும் மேல்கீழாக நடக்கிறது (upside down):—இந்த சூக்ஷ்மம் ஈயின் காலின் அமைப்பில் இருக்கிறது. ஈயின் ஒவ்வொரு காலிலும் இரு சிறிய நகங்கள் போன்றதுண்டு. அதற்கடியில் கட்டை மயிரைப்போன்ற இரு திண்டுகளிருக்கின்றன. இந்த கட்டை ரோமங்கள் குழாய்போன்றது. இக்குழாயின் வழியாக ஈ ஒருவித ஒட்டும்பசையை வெளிவிடுகிறது. இப்பசையின் உதவியால் ஈ எவ்வளவு வழவழப்பான இடத்திலும் எந்த கோணத்திலும் (Angle) மேல்கீழாக நடக்கிறது.

4. மையொத்தும் கடுதாசி எதனால் தண்ணீரை இழுத்துக்கொள்கிறதென்று தெரியுமா?:—ஒரு காகிதத்திற்குப் பளபளப்பை கொடுப்பது அக்காகிதத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் Size "சைஸ்" என்ற ஒரு ரசயானப்பொருளாகும். இந்த சைஸ் என்னும் பொருளை காகிதத்தோடு சேராமல் நீக்கிவிட்டால் காகிதம் சிறு துவாரங்களுடையதாகிவிடுகிறது. ஆகையால் தண்ணீரை உறிஞ்சிவிடுகிறது.

5. நம்மில் சிலருடைய கைவிரல்களில் வெள்ளை அடையாளங்கள் காணப்படுவதின் காரணம் தெரியுமா?:—ஒரு வியாதியிலிருந்து சற்று குணப்பட்டவுடன் அவன் கைவிரல்களில் இவ்வித அடையாளங்கள் ஏற்படும். தேகத்தில் போதிய இரத்தமில்லாததால் இவை ஏற்

படுகிறது. இரத்தத்தின் அணுக்கள் சரியாய் வேலே செய்வதில்லே. ஆகையால் தேக ஆரோக்கியமற்றவர்களின் கைவிரல்களில் இவ்வித அடையாளங்களுக்கு வழியுண்டு.

M. Irudayanathan.

---

## முதல் வகுப்புக்கு ஏற்ற ஓர் கணிதப் பாட்டு

(A. S. Ignatius, Teacher)

1-ம் + 1-ம் = 2—ஜப்பான்காரன் குண்டு.
2-ம் + 1-ம் = 3—ஐயா வீட்டுத் தூணு.
3-ம் + 1-ம் = 4—கறுப்பு நாயின் வாலு.
4-ம் + 1-ம் = 5—பாட்டித் தலே பஞ்சு.
5-ம் + 1-ம் = 6—ரோட்டிலே ஊற்று(கி)ற தாரு. (Tar)
6-ம் + 1-ம் = 7—சிவந்த கேப்பைக் கூழு.
7-ம் + 1-ம் = 8—பாட்டி சுட்ட புட்டு.
8-ம் + 1-ம் = 9—பாட்டி வெற்றிலே தின்பது.
9-ம் + 1-ம் = 10—உன் முதுகிலே ஒரு குத்து.
10-ம் + 10-ம் = 20—பாட்டி சோறு தருவது.
20-ம் + 10-ம் = 30—முத்து மாலே கோர்ப்பது.
30-ம் + 10-ம் = 40—நாகன் சோறு தின்பது.
40-ம் + 10-ம் = 50—அம்மா முத்தம் தருவது.
50-ம் + 10-ம் = 60—எருது வண்டி இழுப்பது.
60-ம் + 10-ம் = 70—அப்பா நிலம் உழுவது.
70-ம் + 10-ம் = 80—எழுத்தை நித்தம் காண்பது.
80-ம் + 10-ம் = 90—உண்பது நித்தம் பால், சோறு.
90-ம் + 10-ம் = 100—தோழனே நீ கூறு.

---

# பெற்ருேர் சங்கங்கள்

13—4—44-ல் துறையூர் "ஸ்ரீ சாரதா வித்யாலயா" வின் பெ. ச. கூட்டம் முசிரி ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் ஸ்ரீ S. நாக சுந்தரம்பிள்ளை B,A.,B.L. அவர்கள் தலைமை வகிக்க, ஷை விழா வெகு சிறப்பாக நடந்தேறியதாக தலைமை ஆசிரியர் ஸ்ரீ T. M. சுந்தரேச சர்மா அவர்கள் தெரிவித்துள்ளனர்

15—4 - 44-ல் மேட்டுப்பாளையம் ஆரம்ப ஆசிரியைகளின் சங்கம் ஷை ஊர் போர்டு பெண்பாடசாலையில் திரு. அநந்த நாராயண அய்யர் அவர்களது தலைமையின்கீழ் சிறப்பாய் நடைபெற்றதாக ஸ்ரீமதி A. Margaret (Secretary) அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

15—4—44-ல் புள்ளம்பாடி ஆரம்ப ஆசிரியர் சங்க 36-வது ஆண்டு விழா திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) திரு. S. முருகேச முதலியார் B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் வெகு குதூகலத்துடன் (நாடகம், சம்பாஷணை, உபந்நியாசங்கள் முதலிய நிகழ்ச்சிகள்) நடைபெற்றதாக ஷை சங்க காரியதரிசியவர்கள் அறிவித்துள்ளனர்.

15—4—44-ல் அனுமந்தபுரம் பஞ்சாயித்து போர்டு பாடசாலையின் சுகாதார வாரக்கொண்டாட்டம் வெகு சிறப்பாக கொண்டாடப் பட்டதாக தலைமை ஆசிரியர் ஸ்ரீ பூவராகமூர்த்தி ராவ் அவர்கள் தெரிவித்திருக்கிருர்கள்.

21—4—44-ல் திருச்சி விளக்தைபோர்டு பெண் பாடசாலை பெ. ச. கூட்டம் ஸ்ரீ B. ரங்கராவ் அவர்களது தலைமையின்கீழ் வெகு சிறப்பாய் நடைபெற்றதாக Head-Mistress. M. Alice Kamalam அவர்கள் தெரிவித்துள்ளனர்.

22—4—44-ல் திருச்சினுப்பள்ளி ஜில்லா லேபர் ஆசிரியர் சங்கத் தேர்தல் விழா பிஷப் ஹீபர் கலாசாலையில் வழக்கறிஞர் T. P. வேதாச்சலம், B. A., B. L. அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றதென்றும் அத்தேர்தலில் திரு. P. முத்துசாமி (தலைவர்) திரு. P. A. சூசை (உபதலைவர்) திரு. S. ரத்னசாமி (காரியதரிசி) திரு. K. கிருஷ்ணசாமி உபகாரியதரிசி திரு. C. A. சிங்காரவேல் (பொருளாளர்) முதலிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று திரு. P. முத்துசாமி அவர்கள் அறிவித்துள்ளனர்.

29—4—44-ல் முசிரி ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர் சங்கக்கூட்டம் திருச்சி உதவி கல்வி அதிகாரி திரு. வீராஸாமி பத்தர், M.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றதாக காரியதரிசி திரு. A. தேவதாஸ் அவர்கள் அறிவித்துள்ளனர்.

29—4—44 & 30—4—44-ம் தேதிகளில் பழமார்நேரி பஞ்சாயித்துபோர்டு பாடசாலை மாணவ, மாணவிகளின் சங்க ஆண்டு விழா, பெ. ச. கூட்டம் ஆகிய கொண்டாட்டங்கள் வெகு குதூகலத்துடன் நடைபெற்றதென தலைமை ஆசிரியர் ஸ்ரீ A. S. கஸ்தூரி ரெங்கன் அவர்கள் விவரம் தெரிவித்துள்ளனர்.

8—5—44-ல் திண்டுக்கல் மாவப்பட்டி R. C. எலிமெண்டரி பாடசாலையின் பெ. ச. கூட்டம் இன்ஸ். ஸ்ரீ T. P. ஸ்ரீனிவாஸன், B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றதாக காரியதரிசி I. ஞானப்பிரகாசம் எழுதியுள்ளனர்.

9—5—44-ல் உ. தா. வடவீக்கம் லேபர் பாடசாலையின் பெ. ச. ஆண்டுவிழா இன்ஸ். திரு. T. R. ஸ்ரீதரன், B.Sc., L.T. அவர்களது தலைமையின்கீழ் வெகு ஆடம்பரத்துடன் நடைபெற்றது. சிறப்பாய் முடிவெய்தியது என காரியதரிசி திரு. D. செபஸ்தியான் அவர்கள் அறிவித்துள்ளனர்.

15—5—44-ல் லா. தா. கீரமங்கலம் லேபர் பாடசாலையின் பெ. ச. கூட்டம் இன்ஸ். ஸ்ரீ L. D. ராதாகிருஷ்ணய்யர், B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றதாக தலைமை ஆசிரியர் ஜனாப் A. Md. Ibrahim அவர்கள் தெரிவித்துள்ளனர்.

16—5—44-ல் லா. தா. அபிஷேகபுரம் லேபர் பாடசாலையின் பெ. ச. கூட்டம் ஷெ ரேஞ்சு டெப் இன்ஸ்பெக்டர் அவர்களது தலைமையின்கீழ் சிறப்பாய் நடைபெற்றதென ஆசிரியர் திரு. D. தேவவரம் அவர்கள் எழுதியுள்ளார்.

10—6—44-ல் பல்லடம் தாலூகா ஆரம்ப ஆசிரியர் யூனியன் மகாநாடு, சூலூர் ஷண்முகதேவி டாக்கீஸில் திரு K. M. பாலசுப்பிரமணியம், B.A., B.L. (Provincial Song Publicity Organiser Madras) அவர்களது தலைமையின்கீழ் நடைபெறுமென "அழைப்பு" அறிக்கை திரு. S. கோவிந்தசாமி அவர்கள் (தலைவர்) திரு. S. திருமலைசாமி ஐயங்கார் (காரியதரிசி) விடுத்துள்ளனர்.

சேலம் உயர்தர ஆரம்பப்பள்ளி உரத்தூர் இப்பள்ளியின் வெள்ளி விழா 2—6—44-ல் திரு. P. K. பட்டாபிராம சாஸ்திரியார், B.A., L.T. (D. E. O. Tanjore.) அவர்களது தலைமையின்கீழ் நடைபெறும் என்றும் அவ்வமயம் ஷெ பள்ளியின் பழைய மாணவர் கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவிழாவும் நடைபெறும் என்றும் பள்ளித்தலைவர் ஸ்ரீ T. P. செல்லச்சாமி அவர்கள் அழைப்பறிக்கை விடுத்துள்ளனர்.

189993
சென்னை-600 008

28, மே. க. நொண்டிச்சிந்து ஏகதாளம்

| | |
|---|---|
| மத் தநி பாதப மக | மா; ஸம மம |
| மூர்க்கமுள்ள நீக்ரோஜாதி | யார் ஆப்ரிக்காவில் |
| கம பப பாதப மம | கம கரி கா மா |
| முந்தநடுபுல்வெளியை . | சொந்தமாக . |
| கம கரி கா மா | |
| சொந்தமாக . | |

(மற்ற அடிகளை இதேமாதிரி பாடவும்)

2. கோரைப்புல் குடிசைகளும்—மண் வீடுகள்
கூடை வடிவம் கவிழ்த்து குடியிருந்து

3. மாடாடு மந்தை மந்தையாய்—மேய்த்திடுவார்
மட்டக் குதிரை கழுதை ஒட்டகங்களும்

4. தங்கும் மந்தை மரவேலியாம்—சிங்கம் புலி
தாக்கிடாமல் கார்த்திடுவர் அதே ஜோலியாம்

5. கோடைமழை பொழிந்திடுமாம்—பருத்தி
கோதுமை நெல் மக்காச்சோளம் விளைந்திடுமாம்

6. ஆரஞ்சு வாழை கொய்யா—பழவர்க்கம்
அதிகமாய் பயிர்செய்து அருந்துகிறார்

7. கத்தி ஈட்டி வாள் எடுப்பார்—நாய்கள் கூட்டி
காட்டுமுயல் கடல் யானை வேட்டை தொடுப்பார்

8. நன்றாய்ப் படித்திடுவர்—சிறுவர்கள்
நண்டு நத்தை எலிவேட்டை கொண்டுவருவார்

9. பற்கள் வெள்ளை மயிர் சுருட்டை—தட்டை மூக்கு
பருத்த உதடு நெட்டை கறுப்பர்களாம்

10. தழைக்க அவர்களிருந்து—ஆடு மாடு
தத்தம் பண்ணை வேறு வேறாய் சஞ்சரிக்கிறார்.

Reg. No. M. 1534

# OUR EMPLOYMENT BUREAU

1. WANTED immediately 2 Secondary Grade Trained Masters and one Tamil Pandit for R. C. Boys' Higher Ely. School, Purathakudy.

2. WANTED one Secondary Grade Trained Mistress to be the Head Mistress of the R. C. Girls School, Purathakudy.

For full particulars regarding 1. and 2. apply to:—

Very Rev. Fr. J. ADIROUBAM,
Manager and Correspondent,
R. C. Boys' and Girls' School,
Purathakudy, Irungalur P.O.
Trichy Dt.

3. WANTED a Secondary Grade Trained Master or Mistress for St. Joseph's Boys' Ely. School, Manaparai, on Rs. 21+Rs. 4 war allowance, per mensem.

Apply to the Manager, R. C. Boys' School,
Manaparai, Trichy Dt.

4. WANTED 2 Secondary Grade and 2 Higher Ely. Trained Teachers. Mistresses may also apply. Pay Rs. 25—½—45, and Rs. 13—½—30.

Apply to the Manager,
Nammalwar Higher Ely. School,
Namakkal, Salem Dt.

5. WANTED one Secondary Grade Trained Teacher. Salary Rs. 25 per mensem.

Apply to the Manager,
R. C. Boys' School,
Anantharayankottai,
(Via) Dindigul.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.